DINA MALAR
Date. 18/11/2018

# ‘டாஸ்மாக்’ கடையில் பிளாஸ்டிக்குக்கு தடை

– நமது நிருபர் –

வணிக வளாகங்களில் உள்ள, நவீன மது கடைகளில், பிளாஸ்டிக் பை பயன்படுத்த, டாஸ்மாக் தடை விதித்துள்ளது.

தமிழக அரசின், டாஸ்மாக் நிறுவனத்திற்கு, 4,700 சில்லரை கடைகள் மட்டுமின்றி, சென்னை, கோவை உள்ளிட்ட நகரங்களில் உள்ள, ‘ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்’ எனப்படும், வணிக வளாகங்களிலும், நவீன மது கடைகள் உள்ளன.

அவற்றில், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்த, உயர்மதிப்புடைய, பீர், மது வகைகள் விற்கப்படுகின்றன.

அந்த கடைகளில், ‘பாயின்ட் ஆப் சேல்’ கருவி மற்றும் மொபைல், ‘ஆப்’ என்ற செயலி வாயிலாகவும் பணம் செலுத்தலாம். இதற்காக, தனி செயலியையும், டாஸ்மாக் துவக்கியுள்ளது. அதில், நவீன கடைகளில் உள்ள மது வகைகள், அவற்றின் விலை விபரங்களை தெரிந்து கொள்ளலாம்.

அங்குள்ள ஊழியர்கள், மது வகைகளை, கறுப்பு நிற பிளாஸ்டிக் பையில் போட்டுதருகின்றனர். இதற்காக, ஒரு பைக்கு, ஊழியர்கள், 10 ரூபாய் கட்டணம் வசூலிக்கின்றனர். தமிழகத்தில், 2019 ஜனவரி முதல், பிளாஸ்டிக் பயன்படுத்துவதற்கு, அரசு தடை விதித்துள்ளது.

இதையடுத்து, வணிக வளாக மது கடைகளில், பிளாஸ்டிக் பை பயன்படுத்த, டாஸ்மாக் தடை விதித்ததுடன், வீட்டில் இருந்து பை எடுத்து வருமாறும், மொபைல் செயலி வாயிலாக; மது பிரியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது.